# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

இரண்டாம் வருட/ முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு 2013/2014

(மார்ச்/ஏப்ரல் 2016)

## TLS 2143 தெரிவு செய்யப்பட்ட நூல்கள்
## Prescribed Texts – I

நேரம்: 03 மணித்தியாலங்கள்

முதலாம் வினாவிற்கும் ஏனையனவற்றுள் எவையேனும் மூன்று வினாக்களுக்குமாக மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடையளிக்குக.

எழுத்துத் தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.

---

01. பின்வரும் செய்யுள்களின்
    i) பொருளைத் தருக.
    ii) அடிக்கோடிட்ட பகுதிகளின் நயத்தைக் காண்க.

அ) ஈயற் புற்றத்து ஈர்ம் புறத்து இறுத்த
குரும்பி வல்சிப் பெருங் கை ஏற்றை
தூங்கு தோல் துதிய வள் உகிர் கதுவலின்,
பாம்பு மதன் அழியும் பானாட் கங்குலும்,
அரிய அல்ல - மன் - இகுளை! - 'பெரிய
கேழல் அட்ட பேழ்வாய் ஏற்றை
பலா அமல் அடுக்கம் புலாவ ஈர்க்கும்
கழை நரல் சிலம்பின் ஆங்கண், வழையோடு
வாழை ஓங்கிய தாழ் கண் அசும்பில்,
படு கடுங் களிற்றின் வருத்தம் சொலிய,
பிடி படி முறுக்கிய பெரு மரப் பூசல்
விண் தோய் விடரகத்து இயம்பும் அவர் நாட்டு,
எண் அரும் பிறங்கல் மான் அதர் மயங்காது,
மின்னு விடச் சிறிய ஒதுங்கி, மென்மெல,
துளி தலைத் தலைஇய மணி ஏர் ஐம்பால்
சிறுபுறம் புதைய வாரி, குரல் பிழியூஉ,
நெறிகெட விலங்கிய, நீயிர், இச் சுரம்,
அறிதலும் அறிந்திரோ? என்னுநர்ப் பெறினே.

(16 புள்ளிகள்)

ஆ) மன்றின் முதுமக்கள் வாழும் பதி இனிதே
தந்திரத்தின் வாழும் தவசிகள் மாண்பினிதே
எஞ்சா விழுச்சீர் இருமுது மக்களைக்
கண்டெழுதல் காலை இனிது.

(08 புள்ளிகள்)

இ) போதடைந் திருளெனும் படலம் போர்த்திட
மாதவ ரெனுமுகம் மதுவு மன்னருந்
தாதவிழ் நதிக்கரைத் தருவி னீழலிற்
சோதிமா முகமலர் விழிக நூங்கினார்

(08 புள்ளிகள்)

ஈ) தொல்மாண்ட புடை நகரில் துன்னியபின் ஆங்குறையும்
பொன்மாண்ட முடித்தாவின் பொலிவமைந்த எங்குலத்தோர்
வன்மாண்ட அருட்புரிந்து வந்த துயர் ஆறும் என
தன்மாண்ட உளத்து இதுவே சார்பு எனத்தான் உணர்ந்தானே (08 புள்ளிகள்

02. சங்க காலப் பெண்கள் தம் இல்லற வாழ்வில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டமையை உமக்குத் தரப்பட்ட அகநானூற்றுப் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

(20 புள்ளிகள்

03. "சங்க மருவிய கால தமிழகச் சூழலில் நிலவிய சமூகக் குறைபாடுகளுக்குத் தீர்வு காணுவதே 'இனியவை நாற்பது' நூலின் நோக்கமாகும்" இக் கூற்றின் பொருத்தப்பாட்டினை பாடல்களின் துணையோடு விளக்குக.

(20 புள்ளிகள்

04. கலிங்கத்துப்பரணியில் 'காடு பாடியது' என்னும் பகுதியில் பாலைநிலத்தின் தன்மை சித்திரிக்கப்படுமாற்றினை விளக்குக.

(20 புள்ளிகள்)

05. தேம்பாவணி 'மகவருள் படலத்தை' ஆதாரமாகக் கொண்டு வீரமாமுனிவரின் கவித்துவச் சிறப்பினை மதிப்பிடுக.

(20 புள்ளிகள்)

06. பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டிற்குக்** குறிப்புரை எழுதுக.

அ) பெரும்பாணாற்றுப்படையில் தொண்டைமான் இளந்திரையனின் சிறப்பு கூறப்படுமாறு.
ஆ) சீறாப்புராணம் நதி கடந்த படலத்தில் சித்திரிக்கப்படும் நபிகள் நாயகத்தின் பெருமை.
இ) கொடை மற்றும் விருந்துபசாரச் சிறப்புகள் பற்றி ஔவையார் தனிப்பாடல்களில் கூறப்படும் விடயங்கள்.

(10 x 2=20 புள்ளிகள்)

*****************************************************